1970 மார்ச் 5]

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அது அவசியம் இருந்தால் அதுபற்றி அரசாங்கம் நடவடிக்கைகள் எடுக்கும்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, with regard to Hosur Taluk, there has been a chronic drought for the last five years. In view of this, will the Hon. Minister be pleased to consider the grant of some subsidy to help the suffering ryots there in addition to the grant of loans?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : மானியம் கொடுப்பதற்கு இப்போது எந்தவிதமான திட்டமும் இல்லை. அந்தப் பகுதி பின்தங்கிய பகுதி, அங்கு ஏழை விவசாயிகள் இருக்கிறார்கள் என்பதால் தான் ஏற்கெனவே அரசாங்கம், 400 ரூபாய் கொடுத்தால் போதும் என்று முடிவெடுத்திருந்தது. அது விவசாயத் துறை இயக்குநர் அவர்களால் 750 ரூபாய் என்று உயர்த்தப்பட்டிருக்கிறது. மிகவும் பின்தங்கிய பகுதி. அவர்களை உற்சாகப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையிலே தான் செய்யப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (■) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்படவில்லை என்பதைக் குறிக்கும்.)

(2) நடைமுறைக் கேள்வி.

ஓர் உறுப்பினரின் வினாக்கள் வினாப்பட்டியலில் இடம் பெறாதது குறித்து

■ திரு. பி. எஸ். தனுஷ்கோடி : பாயின்ட் ஆஃப் ஆர்டர், சார். தலைவர் அவர்களே, கடந்த 3 வருஷ காலமாக, என்னுடைய பெயரில் கொடுக்கப்பட்டிருக்கும் கேள்விகளை ஒவ்வொரு சட்டமன்றக் கூட்டமும் முடிந்த பிறகு, புதுப்பிக்க வேண்டுமென்று நான் எழுத்து மூலமாகக் கொடுத்துக் கொண்டிருக்கிறேன். தங்கள் மூலமாகவும் தனியாகக் கடிதம் கொடுத்திருக்கிறேன். இதுவரையில் என்னுடைய கேள்விகள் இடம் பெறவில்லை. குறிப்பிட்டவர்களுடைய கேள்விகள் மட்டும் இடம் பெறுகின்றன. தனி ஏற்பாடு இருக்கிறதா? தாங்கள் இதற்குத் தீர்ப்பு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பாயின்ட் ஆஃப் ஆர்டர் இல்லை. கேள்வி கொடுத்து வரவில்லை என்று சொல்லுகிறார்கள். திரு. தனுஷ்கோடி அவர்கள் கொடுத்திருக்கும் கேள்விகள் 7. 2 கேள்விகள் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன. 5 கேள்விகள் மீண்

TRUTH ALONE TRIUMPHS

டும் அங்கத்தினர் அவர்களுக்கோ, அல்லது மற்ற இலாக்காக்களுக்கு நடவடிக்கை எடுக்கவோ அனுப்பப்பட்டிருக்கின்றன. அவற்றிற்கான விடைகள் அந்த இலாக்காவிலிருந்து இன்னும் ஒரு கேள்விக்குக் கூட வரவில்லை. ஆகவே அவைகளை இந்த அவைக்குக் கொண்டு வர முடியவில்லை. அதுதான் நிலைமை: ஆகவே, ஒவ்வொருவரும் இதுபற்றி கேட்க ஆரம்பித்தால் முடியாது. கேள்விகள் கொடுத்தோம், வரவில்லை என்று சொன்னால், அதை இந்த அவையிலே கேட்கக்கூடாது, பேரவைத் தலைவருடைய அறையிலே கேட்கவேண்டும். ஆகவே, உறுப்பினர்களிடம் பாரபட்சம் காட்டுகின்ற நிலைமை இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

(3) ஒற்றிவைப்புத் தீர்மானங்கள்

(அ) மேட்டூர் நகர எல்லையில் பிளாக் 65-ல் ஏழை தொழிலாளர்களுடைய குடிசைகள் இடித்துத் தள்ளப்பட்டதும், அவர்களில் மூவரின் உண்ணா விரதமும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து திரு. சுரேந்திரன் அவர்கள் ஒரு ஒற்றி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். "மேட்டூர் நகர எல்லைக்குட்பட்ட பிளாக் 65-ல் நீண்ட நாளாக செருப்பு தைப்பது, துணி வெளுப்பது, சவரம் செய்வது, வெற்றிலை, பாக்கு பீடி வியாபாரம் போன்ற தொழில் செய்து பல வருடங்களாக அந்த இடத்தில் ஜீவனம் செய்து வரும் ஏழைகளுக்கு மாற்றிடம் அளிக்காமல் கூட 22 குடிசைகளை நகர அமைப்பு சிப்பந்திகள் போலீசை வைத்து இடித்துத் தள்ளி அவர்களுக்குப் பெரும் நஷ்டத்தையும், துன்பத்தையும் உண்டாக்கியிருக்கின்றனர்" என்ற இந்தச் செய்தியையும், "இது போன்ற நிலை ஏற்படக்கூடும் என்று கருதி இந்த ஏழைகளில் மூன்று பேர் 1—3—1970-லிருந்து உண்ணா விரதம் இருந்து வருகின்றனர்" என்ற இந்தச் செய்தி குறித்து விவாதிக்க இந்தப் பேரவையை ஒற்றி வைக்க வேண்டுமென்று, ஒற்றி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இது அரசினுடைய அன்றாட அலுவல்களுக்கு உட்பட்டது. உண்ணாவிரதம் போன்றவைகளுக்கு அவையின் பிற அலுவல்களை ஒற்றி வைப்பது பேரவை நிகழ்ச்சிகளிலே இதுவரையிலும் இல்லாத ஒரு நிகழ்ச்சி. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதுகுறித்து நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதத்தில் கருத்துக்களைக் கூற வாய்ப்பிருப்பதால் இதற்கு அனுமதி தர மறுக்கிறேன்.

(ஆ) குடியாத்தம் தாலுக்கா மானியப்பட்டு கிராமத்தில் காவல் துறையினர் அத்து மீறி நடந்துகொண்டதாகச் சொல்லப்படுவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்தபடியாக, திரு வி.கே. கோதண்டராமன் அவர்கள் ஓர் ஒற்றி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அது எப்படி இந்த அவையில் விவாதிக்கக்கூடியது